2013 மே 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நம்பி வந்தவர்கள் என்றும் கெடுவதில்லை' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று, தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இலவசமாக வழங்குகின்ற இலவச ஆடுகளும், மாடுகளும் இன்னும் ஒரு சில மாதங்களிலே கிடைக்கவிருப்பதால் 10,000 என்ற அந்த இலக்கை இன்னும் ஒரு சில மாதங்களிலே அடைந்துவிடும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக உரிய ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 480, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

480—

பேருந்து வசதி

***5511—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கியிலிருந்து திருப்புவனவாசலுக்கு கரூர் வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி-திருப்புவனவாசலுக்கு, கரூர் வழியாக அரசுப் பேருந்து புறநகர் தடம் எண் 483 மூலம் 4 நடைகளும், இரண்டு தனியார் பேருந்துகள்மூலம் 16 நடைகளும் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது, பயணிகள் சராசரியாக 37 சதவிகிதம் மட்டுமே பயணம் செய்கின்றனர். எனவே, இப்பகுதி மக்களுக்கு

[2013 மே 13

இதுவே போதுமானதாகும். வரும் ஆண்டுகளில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுபெற்று, கூடுதல் நடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லணைக்கும், கரிகால் சோழனுக்கும் பெருமை சேர்த்து, பயிர் காத்து, உயிர் காத்த காவேரித் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி), பொன்னி நதியை மீட்ட எங்கள் புண்ணியமே, வாழும் வரலாற்றுச் சிறப்பே, வருங்கால பாரதத்தின் வலிமையான தலைமையே! (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய தமிழ் மக்களின் ஆதாரமே, நாளைய இந்திய மக்களின் அடையாளமே, தாயே, தமிழே, நாங்கள் தவமாய், தவமிருந்து பெற்ற தவப்பயனே, மாற்றந்தந்த மக்களுக்கு வாழ்வில் ஏற்றம் பெற தமிழகத்தின் தலைவிதியை மாற்ற (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே தினந்தோறும் விதி எண் 110 இன்கீழ் சிறப்பான திட்டங்களை தந்து, மக்கள் நலன் ஒன்றே என்று மனதில் வைத்து, நாளும் பொழுதும், மக்களுக்காகவே வாழும் புனிதமே, நான் நித்தம் நித்தம் வணங்கும் இதய தெய்வம் மாட்சிமைதங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே, 2,000 ஏக்கர் பரப்பளவிலே தொழிற்பூங்கா அமைத்திடவும், அறந்தாங்கி அரசினர் மருத்துவமனையில் இரண்டு குழந்தைகள் நல மருத்துவர்களும், 10 செவிலியர்களுடன்கூடிய பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு மையம் 24 மணி நேரமும் இயங்கும் என ஆணையிட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் பணிந்து வணங்குகிறேன் தாயே!

2013 மே 13]

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய கடைக்கோடி பகுதியான திருப்புவனவாசல் பகுதி, அறந்தாங்கி தொகுதியினுடைய கடைக்கோடி பகுதியாகும். திருப்புவனவாசல் என்பது ஒரு பிரசித்தி பெற்ற திருத்தலம். இங்கே, நான்கு யுகங்களுக்கு முன்பாக சுயம்புலிங்கமாக காட்சியளித்து, பின் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட 14 திருத்தலங்களில், இது இரண்டாவதாக கட்டப்பட்ட திருத்தலமாகும். இதன் வடிவமைப்பைப் பார்த்துத்தான் தஞ்சை பெரிய கோயிலே கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இதன் பெருமை என்னவென்றால் இந்தத் திருத்தலத்திலே வழிபாடு செய்தவர்களுக்கு மறு பிறப்பு இல்லை என்பது இங்குள்ள கல்வெட்டுகள்மூலம் அறிய முடிகிறது. இதன் அருகிலே ஓரியூர் அருளானந்தர் தேவாலயமும் உள்ளது. மேலும், எஸ்.டி. பட்டணம் என்று அழைக்கப்படுகின்ற ராசிப்பட்டணம் அருகில் உள்ள நைனார்முகம்மது சாகிப் தர்காவும் உள்ளது. தீர்த்தாண்டம் என்று சொல்லப்படுகின்ற புண்ணிய திருத்தலமும் அருகில் உள்ளது. அதனால் திருப்புவனவாசல் பகுதிக்கு அதிகமான பேருந்து வசதிகளை இயக்கித் தரவும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியிலே திருப்புவனவாசலில் இருந்து வேளாங்கண்ணிக்கு புதிய பேருந்தும், திருப்புவனவாசலில் இருந்து பழனிக்கு புதிய பேருந்தையும் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி கேட்டு, அதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி தொகுதி மக்களின் நலன் கருதி, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 10 புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் கொடி அசைத்து துவக்கி வைக்கப்பட்டு இன்று மக்களுடைய பயன்பாட்டில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 10 புதிய வழித்தடங்களோடு கூடுதலாக அறந்தாங்கி தொகுதி மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில்*

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு 9 பேருந்துகளுக்குண்டான அந்த வழித்தட நீட்டிப்புகளுக்கும் உத்தரவுகள் வழங்கப்பட்டு, இன்று மக்களுக்கு பேருந்து சேவைகளைப் புரிந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்களில் பயணிகளுடைய எண்ணிக்கைகளுக்கு ஏற்ப மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய உத்தரவைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி தொகுதி மக்களுடைய நலனுக்காக அதிகமான பேருந்து வசதியைச் செய்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களிடம் ஆணையைப் பெற்று வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 481, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

481—

மாணவர் விடுதி

***4437—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவ, மாணவியர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

TRUTH ALONE TRIUMPHS